<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP. No.61/2023</u>

**<u>19.06.2026</u>**

**<u>திருமதி. சாந்தகுமாரி, க/பெ. மணிகண்டன்</u>**

PW : 1

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 19 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**<u>5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை இரத்து செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பு 28.08.2024 ந் தேதியிட்ட 16.06.2026 ல் இரத்து செய்யப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு ஏற்கனவே அவரால் 06.08.2024 ல் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலமும், ஆவணங்களும் ஏற்றுக்கொள்வதன் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பிலும், பழைய குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு இன்று 5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எனது கணவர் பெயர் மணிகண்டன் அவர் இறக்கும் போது வயது 33 ஆகும். அவர் Diplomo Engineer படித்துள்ளார். அவர் சென்னையில் வேலை பார்த்தார். எனது கணவர் ரூ.30,000/- சம்பாதித்தாக மிகைப்படுத்தி ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தானது சென்னையில் அச்சனபாக்கத்தில் ஏற்பட்டது. இதன் சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். இந்த முதல் தகவல் அறிக்கையில் தமிழ்நாடு போக்குவரத்து கழக ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

லாரியின் மீது பேருந்து மோதியதாக தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் மதுராந்தகம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையில் பேருந்து ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாக ஓட்டியதால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது

எனக்கு தெரியாது. இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்பட்டுள்ளதால் 1மற்றும் 2 ம் எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. இந்த விபத்து 4 ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்பதால் 5 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் மனுவில் ரூ.60,00,000/- மிகைப்படுத்தி கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 5 ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுப்படிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.06.19 18:45:41 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்